# ஜோ மல்லூரியின் நூல்களில் உவமைகள்

**இ. வேதவள்ளி**
முனைவர்பட்ட ஆய்வாளர் (ப), தமிழ்த்துறை
அரசினர் கலைக்கல்லூரி (த), கும்பகோணம்

**முனைவர் ந. கிருஷ்ணவேணி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசினர் கலைக்கல்லூரி (த), கும்பகோணம்

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

தமிழ் இலக்கிய உலகில் எழுத்தாளராக பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார் ஜோ.மல்லூரி. வாழ்க்கை ஒருமுறைதான், வழிப்போக்கன், தூண்டில் தருகிறேன், அடிக்கல், கிழக்கு தூரமல்ல உள்ளிட்ட பல நூல்களைப் படைத்துள்ளார். இலக்கியச் சுவைகளில் படைப்பிற்கு அழகு சேர்க்கும் உத்திகளில் தனிச்சிறப்பானது 'உவமை'. ஒரு படைப்பாளனின் தனித்துவத்தையும் அவர்தம் படைப்புகளின் உட்பொருள் அடர்த்தி சிறப்பையும் பாங்குற வெளிப்படுத்த 'உவமை' கையாளப்படுகிறது. அவ்வகையில் ஜோ மல்லூரியின் நூல்களில் உவமைகள் எங்ஙனம் பயின்று வந்துள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### உவமையின் இலக்கணம்

ஒரு பொருளை அதனோடு ஒத்த இன்னொரு பொருள் கொண்டு விளக்குதல் 'உவமை' ஆகும். பொருளை, இன்னொரு பொருளோடு சேர்த்து வைத்தும் அவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதும் மனித அறிவின் இயல்பு. தொல்காப்பிய பொருளதிகார உரையில் இளம்பூரணர் "புலன் அல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்" உடையதே உவமை என்கிறார்.

உவமை மொழியின் அமைப்போடும் பாடுபொருள் தளத்தோடும் இயைந்து வருகின்றது. குறிப்பிட்ட சூழமைவின் தேவைகளாகவும் கற்பனை மற்றும் புனைவுத் திறன்களைக் காட்டுவனவாகவும் மொழியின் ஆற்றலை உணர்த்துவனவாகவும் இவை அமைகின்றன. தண்டியலங்காரத்தில்

**"பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்**
**ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்த்**
**தொப்புமை தோன்றச் செப்புவ துவமை"[1]**

**இலக்கியங்களில் உவமை**

இலக்கியத்தில் படைப்பாளர் கையாளும் கலை நுணுக்கத் திறன்களுள் மிகப் பழமையானது, கவிஞனின் வெளியீட்டு முறைக்கும் ஒளியும் தெளிவும் சேர்ப்பது உவமையே. படிப்பவரின் நெஞ்சங்களை எளிதில் ஈர்ப்பதும் கவிஞன் தான் கண்ட காட்சியை மற்றவர் அவரது கற்பனை எல்லைக்குள் மிக நெருங்கிச் சென்று உள்ளபடி கண்டுகொள்ளத் துணைக் கருவியாய் இருப்பதும் உவமையே.

"தானறிந்து சொல்ல விரும்புகிற பொருளை மேலும் தெளிவுபடுத்துவதற்கும், கற்பனைத் திறனோடு அதனைக் காட்டுவதற்கும் கவிஞரின் அறிவுப் பரப்பை விசாலமானதாகக் காட்டுவதற்கும் உவமை பயன்படுகிறது"[2] உவமை என்பது அலங்காரமானதல்ல; அது ஒரு பண்பு; ஒரு மொழித்திறன்; அறிவின் விசாலம்; ஓர் அழகியல் புலப்பாடு; கற்பனையின் ஆற்றல்; கவித்துவ உண்மையின் வெளிப்பாட்டு உத்தி.

**இளையோர் சுயமுன்னேற்ற கருத்துகளில் உவமைகள்**

உலகிலேயே அதிகமாக இளைஞர்களைக் கொண்ட நாடு நம் இந்தியா. இன்னும் பல ஆண்டுகள் இளமையோடும் இளையோரின் துடிப்போடும் வளமையாக வலம்வர போகும் தனிச்சிறப்பு நம் நாட்டுக்கு மட்டுமே உரியதாக இருக்கிறது. இளையோரின் ஆற்றலும் திறமையும் எதிர்வரும் கனவு இந்தியாவை கலையழகோடும் கல்வியறிவோடும் வழிநடத்த துணைபுரிகிறது. அவ்வகையில் படித்த இளையோர் மீது இச்சமூகம் பல்வேறு கேள்விகளைக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறது. வேலையின்மை பொறுப்பின்மை போன்ற குற்றச்சாட்டுகளைக் கூறும்போது,

"வானத்து மூட்டம் பூமியை நோக்கி புறப்பட்ட மாதிரி இளையவர்களை நோக்கி குற்றச்சாட்டுகள் குவிந்து கிடக்கிறது"[3] வானத்திலிருந்து புறப்படும் புகைமூட்டம் பூமிப்பரப்பை நோக்கி வருவதுபோல இளையோரை நோக்கி குற்றச்சாட்டுகள் குவிகின்றன என்று கூறுகிறார்.

"கரும்பு வயல்களை எட்டிப்பார்க்கிற எறும்புகளைப் போல வாலிபத்தின் வாசலை முட்டிக்கொண்டிருக்கிற இளைய இதயங்களே"[4] கரும்பு வயல்களை அதன் இனிப்புக்காக சுவைக்காக எட்டிப் பார்க்கின்ற எறும்புகளைப் போல இளமைத்துடிப்பின் வாலிபத்தின் வாசலில் வளர்ந்து நிற்கக்கூடிய இளைய தலைமுறைகளே என்று குறிப்பிடுகின்றார். இளைஞர்கள் ஆர்வத்தோடு எடுத்த முயற்சிகளில் வெற்றிபெற வேண்டும் என்பதை தெளிவுபடுத்துகிறார்.

"பக்கத்து இருக்கையின் பயணியைப் போல் எல்லாச் சுமைகளும் கூடவே பயணம் செய்யும்"[5] மனித வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறிமாறி வரக்கூடியது. பேருந்தில் முகம் தெரியாத பெயர் தெரியாத மனிதரின் அருகில் அமர்ந்து நாம் பயணிப்பதைப் போலவே வாழ்க்கையின் எல்லாச் சுமைகளும் நம்முடன் சேர்ந்தே பயணம் செய்யும் என்கிறார்.

"மெல்லிசையாய் மேவி வருவது போல, காலைப்பனியில் கண்விழித்த நாற்று பால்மணத்தைக் கூட்டித் தருவது போல, அனுபவ ஞானத்தில் அகம் திறந்த வாழ்க்கை எழுத்தைத் தீட்டித் தர வேண்டும்."[6] என்று ஒரு படைப்பாளி என்பவன் தன் அனுபவத்தில் தான் பட்ட வலிகளைத் தான் அனுபவித்த இன்பங்களை தன்னுடைய ஏக்கங்களை மனம் திறந்து காட்டும் விதமாக எழுத்து அமைய வேண்டும் என்பதை மெல்லிசையைப் போல் மனம் இதமாகவும், நாற்றங்கால் பனியில் நனைந்து பால்மணத்தைத் தருவது போலவும் அமைய வேண்டும் என்று புலப்படுத்துகின்றார்.

### புது நெருப்பு தந்த பாவலன் பாரதியைப் பற்றி

மகாகவி பாரதியார் அடிமைப்பட்டுக்கிடந்த தமிழ்ச் சமூகத்தைப் பாட்டெழுதி மீட்டெடுத்தவர். அந்நியனுக்கு சொந்தமாக இல்லாமல் உரிமைக்காகப் போராடி தன் எழுத்துக்களாலும் பாட்டுக்களாலும் சுதந்திர வேள்வித்தீயைக் கனலாக வார்த்துத் தந்தவர். பாரதியாரைப் பற்றி இக்கவிஞர் குறிப்பிடும்பொழுது உவமைகளைக் கையாண்டுள்ளார்.இசையின் தாளம் தப்பாது ஓடும் நதியின் ஓசையைப் போல இருளில் கிடந்து இருபதாம் நூற்றாண்டின் வெளிச்சமாக கவிதையால் இந்த நூற்றாண்டை நிரப்பியவன் பாரதியார் என்கிறார்.

“தாளகதி தப்பாது ஓடும் நதியின் ஓசையைப் போல் சந்தியாக் காலத்து சந்திரிகைக் கவிதை கொண்டு 20ஆம் நூற்றாண்டை நிரப்பியவன்.”[7] பாரதியின் இறப்பு விந்தையானது. யானை ஒன்று அவருக்கு காலனாக மாறியது. இளவயதிலேயே தன் இறப்பைச் சந்தித்தவர். தமிழினத்திற்கு விடுதலைத்தாகத்தைத் தந்து இறப்பை நாடும் பொழுதினை, புல்லாங்குழலாக இருந்த பாரதியை, புயல் வந்து புரட்டி எடுத்ததுபோல யானையொன்று தூக்கி எறிந்தது என்று வகைப்படுத்துகிறார். காற்றில் பறந்த பஞ்சு தூள்தூளாக அலைவதைப்போல தமிழ்மொழியின் தனிச்சிறப்பை பாடியவர் பாரதியார் என்று விளக்குகிறார்.

“புயல் வந்து புல்லாங்குழலைப் புரட்டி எடுத்தது போல தூக்கி எறியப்பட்டான்; இலவம் பஞ்சு போல் இங்குமங்கும் பறந்தாலும் தமிழின் அமரத் தன்மைக்கு ஆலோலம் பாடியவன்.”[8]

### அகச்செய்திகளில் உவமைகள்

தலைசிறந்த உவமை பொருளின் தன்மையை விளக்குவதோடு அதனைச் சிறப்பிக்கவும் செய்கிறது. உவமை என்னும் நடன நங்கையை பல்வகைக் கோலம் பூண்டு காப்பிய அரங்கில் கவினுற ஆடிக் கவிஞரின் இதயத்தைக் களிப்புறச் செய்வதாக ஒருவர் கூறுகின்றார். உவமை உள்ளத்தே பசுமை படரச் செய்கின்றது. வைகறைப்போதில் தெளிவாகத் தெரியாமல் கிடந்த காட்சிகளை விளக்குமுறக் காட்டுகிறது.

“கதிரவன் ஒளியைப் போல் வண்ணம் சற்றே மறைந்திருக்கும் ஓர் ஓவியத்தை மீண்டும் பளிச்சிடத் தீட்டிப் பாங்குறக் காட்டும் ஓவியக் கலைஞன் ஒருவனைப் போல் உவமையானது நமக்கு ஓரளவு புலனாகாமல் இருப்பனவற்றை நன்கு புலப்படுத்துகிறது.”[9] அகம் சார்ந்த வாழ்வியல் செய்திகளைப் புலப்படுத்துவதற்கு ‘உவமை’ இன்றியமையாத வாயிலாக இருக்கிறது. தலைவியோடு தலைவன் பேசுகின்ற நேரத்தில் மேகங்கள் திரண்டு ஒரேயடியாகக் கொட்டித் தீர்த்தது போல மனமென்னும் காகிதம் நனைந்து விட்டதாக கூறுகின்றார்.

“உன்னோடு பேசுகிற மணித்துளிகளில் - நான் கனமழையில் நனைந்த காகிதமாகி விடுகிறேன்.”[10] அதுபோல இந்தியாவின் முக்கடல்களில் அலைகளே இல்லாமல் அமைதியாக இருந்து பயத்தைத் தருவது பசுபிக் பெருங்கடல். தலைவியைச் சந்தித்த பிறகு தலைவன் தன் மனதில் நினைப்பதாக இவ்வுவமையை கவிஞர் சுட்டுகிறார். அஃதாவது அலைகளே இல்லாமல் இருக்கும் பசுபிக் பெருங்கடலைப் போல கொஞ்சம்கூட சலனம் இல்லாமல் எனது மனம் என்னும் வானத்தில் உதித்த மாலை நேர நிலவே என்று பாடுகின்றார்.

“அலைகள் இல்லாத பசுபிக்பெருங்கடலைப் போல சலனமே இல்லாமல் என் மனவானில் சஞ்சரித்துவிட்ட சாயங்காலச் சந்திரனே.”[11] அரபு நாடுகளில் உள்ள கூடாரங்கள், வீடுகள் யாவும் இருட்டாக இறுக்கமாக இருப்பதைப் போலவும் தேவாலயங்களில் உருகிவழியும் மெழுகுதிரிகளின்

இளக்கத்தைப் போலவும் வளைந்து நெளிந்து கொடுப்பது நம்முடைய நட்பு. எத்தனை ஆண்டுகள் ஆனாலும் இந்த நட்பு காபூல் நாட்டுக்கு சிறப்பான திராட்சைகளைப் போல இனிமையும் இன்பமும் கொடுக்கும் என்கிறார் கவிஞர்.

“அரபுக்கூடாரங்களைப் போல் இறுக்கமும் ஆலய மெழுகுவர்த்தியைப் போன்ற இளக்கமும் கொண்ட நமது நாட்கள் காலம் தாண்டியும் காபூல் திராட்சைகளைப் போல இனிமைக் கொடுக்கும் இதிகாசமாய் இருக்கும்.”[12] ஜோ.மல்லூரி தமது படைப்புகளில் உவமையைக் கையாண்டுள்ளார். தான் கூறவந்த கருத்தை மறைவாகக் கூறவும் அதன் உட்பொதிந்துள்ள செய்தியை உள்ளுணர்ந்து கொள்ளவும் உவமையைப் பயன்படுத்தியுள்ளார். படிக்கின்ற வாசகர்களுக்கு சலிப்பு ஏற்பட்டால் சொல்லிலும் பொருளிலும் சுவை குன்றாமல் தொடரோட்டமாக எதிர்பார்ப்போடு படிக்கின்ற ஆர்வத்தை ஏற்படுத்தும்வகையில் உவமையைக் கையாண்டுள்ளார்.

**துணைநின்ற நூல்கள்**

1. தண்டியலங்காரம், கழக வெளியீடு, பொருளணியியல் 5.
2. தமிழ் அழகியல் மரபும் கோட்பாடும், தி.சு.நடராசன், ப.155.
3. அடிக்கல் - ஜோ மல்லூரி, ப.19.
4. கிழக்கு தூரமல்ல, ஜோ மல்லூரி, ப.34.
5. வாழ்க்கை ஒருமுறைதான், ஜோ மல்லூரி, ப.79.
6. நல்லதோர் தமிழ் செய்தே, ஜோ மல்லூரி, ப.110.
7. நல்லதோர் தமிழ் செய்தே, ஜோ மல்லூரி, ப.47.
8. மேலது, ப.58.
9. இலக்கியத் திறனாய்வு, சு.பாலசந்திரன், ப.167.
10. அம்ரித்தா எனும் அழகியோடு, ஜோ மல்லூரி, ப.56.
11. அடிக்கல், ஜோ மல்லூரி, ப.69.
12. மேலது, ப.58.